கிளமெண்ட்

உரோமை கிளமெண்ட் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் மற்றும் இரண்டாம் நிருபங்கள்

உரோமையின் பேராயரான கிளமெண்ட், கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் ***கொரிந்தியருக்கு தனது கடிதத்தை*** எழுதினார். இக்கடிதமானது ஆரம்பகால திருச்சபையினால் மிகவும் உயர்வாக கருதப்பட்டதோடு, சில கிறிஸ்தவர்கள் இதை புதிய ஏற்பாட்டின் விதிமுறைசார் புத்தகங்களோடுகூட சேர்த்தனர்.

இரண்டாவது கிளமெண்ட் என்று அறியப்படுகிற படைப்பானது புதிய ஏற்பாட்டிற்கு அப்பால் எஞ்சியிருக்கிற ஆதி கிறிஸ்தவ பிரசங்கத்தொகுப்பாக காணப்படுகிறது. ஆனால் இதை எழுதிய ஆசிரியரை பற்றிய விடயங்கள் காணப்படாவிட்டாலும், கிடைக்கப்பெற்ற கையெழுத்து பிரதிகளின் அடிப்படையில் முதலாம் கடிதத்தை எழுதிய அதே உரோமை பேராயரான கிளெமெண்ட்டினாலேயே இரண்டாவது கடிதமும் எழுதப்பட்டிருக்கலாமென கருதக்கூடியதாக உள்ளது. தற்கால அறிஞர்கள் இக்கடிதமானது கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாமென குறிப்பிடுகின்றனர்.

மூலமொழியான கிரேக்கத்தில் எழுதப்பட்ட இவ்விரு படைப்புகளும், புதிய ஏற்பாடுகளுக்கான நியமங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்பதான காலப்பகுதியில் காணப்பட்ட ஆதி கிறிஸ்தவ எழுத்தாக்கங்களின், மனதை கவரக்கூடிய, ஆழமான கண்ணோட்டங்களின் தன்மையை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

Cover image created by Ai technology

S A L M
SouthAsiaLutheranMission.com

ISBN 978-1-960840-18-9
90000
9 781960 840189

கிளமெண்ட்

உரோமை கிளமெண்ட் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் மற்றும் இரண்டாம் நிருபங்கள்

தெற்காசிய லூத்தரன் திருத்தூதுப்பணி
South Asia Lutheran Mission